# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2019

| தரம் : 08 | கணிதம் | நேரம் : 2.00 மணித்தியாலம் |
| --- | --- | --- |
| | சுட்டெண் : ........................................................................ | |


### பகுதி - I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. $1, 4, 9 \ldots\ldots\ldots$ என்ற கோலத்தில் 8 ஆவது உறுப்பைக் காண்க.

02. 110க்கும் 200க்கும் இடையே உள்ள நிறைவர்க்க எண்களின் எண்ணிக்கை யாது?

03. $(+3) - (+2)$ என்பதன் பெறுமானத்தை எண்கோட்டைப் பயன்படுத்திக் காண்க.





Education கல்வி අධ්‍යාපන

04. பிளேட்டோவின் திண்மங்கள் 2 தருக.

05. பெருக்குக: $2p \times 3q$

06. $(-1)^{10}$ இன் பெறுமானத்தைக் காண்க.

07. உருவில் a இன் பெறுமானம் யாது?






08. $\sqrt{2 \times 2 \times 3 \times 3 \times 5 \times 5}$ இன் பெறுமானத்தைக் காண்க.

09. $12x - 18y$ என்பதை இரு காரணிகளின் பெருக்கமாக எழுதுக.



kalvi.lk

| | |
|---|---|
| 10 | தரப்பட்டுள்ள உருவில் $x$ இன் பெறுமானம் காண்க.   |
| 11. | $129 \times 928 = 119712$ என்பதைக் கொண்டு $1.29 \times 9.28$ என்பதன் பெறுமானத்தைக் காண்க. |
| 12. | இக் கூட்டுருவின் சுற்றளவைக் காண்க.   |
| 13. | **கழிக்குக :** $\frac{7}{10} - \frac{2}{5}$ |
| 14. | 20 புள்ளிகள் வழங்கப்பட்ட ஒப்படையில் கமல் பெற்ற புள்ளி 15 ஆயின், கமல் பெற்ற புள்ளியின் சதவீதத்தைக் காண்க. |
| 15. | $x + 3 = 10$ எனும் சமன்பாட்டைத் தீர்க்க. |
| 16. | சதுரத்தின் சுழற்சிச் சமச்சீர் வரிசை யாது? |
| 17. | வெற்றிடங்களுக்கு உகந்தவாறு $\in$ அல்லது $\notin$ ஐ எழுதுக.<br>i) 8 ............ { 6 இன் மடங்குகள் } ii) 25 .......... { நிறைவர்க்க எண்கள் } |
| 18. | ஒரு சதுரமுகியின் மொத்த மேற்பரப்பளவு $96cm^2$ ஆகும். இதன் விளிம்பு ஒன்றின் நீளத்தைக் காண்க. |
| 19. | A= { 10 இலும் கூடிய இரட்டை முதன்மை எண்கள் }. n(A) எவ்வளவு? |
| 20. | $35:40 = 7:$................ என்பதில் வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணை எழுதுக.<br>($20 \times 2 = 40$ புள்ளிகள்) |

Education கல்வி අධ්‍යාපන

## பகுதி - II

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

**01.** **a)** 1, 3, 5, 7, ............... என்னும் 1 இலிருந்து தொடங்கும் ஒற்றை எண்கோலத்தின்

i) பொது உறுப்பு யாது?

ii) 15 ஆம் உறுப்பைக் காண்க.

iii) 101 இவ்வெண்கோலத்தின் எத்தனையாம் உறுப்பு ஆகும்?

**b)** பாலத்தின் முற்பக்கத்தில் அதன்மீது கொண்டு செல்லத்தக்க உயர்ந்த பட்ச திணிவு 7t எனக் குறிப்பிட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. 4.5t நிறையுள்ள ஒரு லொறியில் 50kg அரிசிப் பைக்கற்றுக்கள் 60 ஏற்றப்பட்டுள்ளன.

i) ஏற்றப்பட்டுள்ள 60 அரிசிப் பைக்கற்றுக்களின் மொத்தத் திணிவைக் காண்க.

ii) லொறியுடன் ஏற்றப்பட்டுள்ள அரிசிப் பைக்கற்றுக்களின் மொத்தத் திணிவைக் காண்க.

iii) வினா (ii) இல் பெற்ற கணிப்பின் மூலம் இப் பாலத்தின் மீது இந்த அரிசிப் பைக்கற்றுக்களுடன் லொறி செல்ல உகந்ததன்று என்பதைக் காட்டுக.

(2 + 2 + 2 + 2 + 2 + 2 = 12 புள்ளிகள்)

**02.** **a)** உள்நாட்டு மருந்து ஒன்றை உற்பத்தி செய்வதற்கு கடுக்காயும், தான்றிக்காயும் 2 : 3 என்னும் விகிதத்திலும் தான்றிக்காயும், நெல்லிக்காயும் 4:5 என்னும் விகிதத்திலும் கலக்கப்பட்டன.

i) இம் மருந்தில் கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் ஆகியவற்றுக்கிடையிலான விகிதத்தைக் காண்க.

ii) 700g மருந்திலுள்ள நெல்லிக்காயின் அளவைக் கிராமில் காண்க.

**b)** ஒரு கலவன் பாடசாலையிலுள்ள பெண்பிள்ளைகளின் சதவீதம் 55% உம் ஆண்பிள்ளைகளின் எண்ணிக்கை 18 ஆகும்.

i) ஆண்பிள்ளைகளின் சதவீதத்தைக் காண்க.

ii) பெண்பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?


iii) பாடசாலையிலுள்ள பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

iv) இக் கலவன் பாடசாலையிலுள்ள பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை 5% ஆனால் அதிகரித்ததெனின் தற்போது பாடசாலையிலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கையைக் காண்க.


(2 + 3 + 1 + 2 + 1 + 3 = 12 புள்ளிகள்)

03. a) i) முக்கோணி ஒன்றின் புறக்கோணங்களின் கூட்டுத்தொகை யாது?

ii) உருவில் $x$ இன் பருமனைக் காண்க.




iii) உருவில் தரப்பட்டுள்ள தகவலுக்கேற்ப a, b இன் பெறுமானத்தைக் காண்க.





Education கல்வி අධ්‍යාපන

b) ஒரு கனவுருவின் மேல் செவ்வக அடியைக் கொண்ட நான்முகி பொருத்தப்பட்டது. இக் கூட்டுத்திண்ம உருவின்,

i) உச்சிகளின் எண்ணிக்கை

ii) முகங்களின் எண்ணிக்கை

iii) விளிம்புகளின் எண்ணிக்கை
ஆகியவற்றைக் காண்க.



iv) இத் திண்மத்திற்கு ஒயிலரின் தொடர்பு உண்மையாகுமா, இல்லையா என்பதைக் காரணங்களுடன் காட்டுக.

( 1 + 2 + 4 +1 + 1 +1 +2 = 12 புள்ளிகள்)


kalvi.lk

04. i) சுருக்குக.

$2(a+3b) + a(a+2)$

ii) $3(x+2) = 9$ என்ற சமன்பாட்டைத் தீர்க்குக.

iii) பேனை ஒன்றின் விலை ரூபாய் $x$ உம், பென்சில் ஒன்றின் விலை ரூபாய் y உம் ஆகும். இதே வகையான 3 பேனைகளையும், 5 பென்சில்களையும் வாங்குவதற்கு தேவையான மொத்தப் பணத்தை அட்சரகணித கோவையினால் காட்டுக.

iv) $36x - 54y + 45$ என்ற அட்சரகணிதக் கோவைகள் ஒவ்வொன்றினதும் உறுப்புக்களின் பொ. கா. பெ. ஐ ஒரு காரணியாகக் கொண்டு இக் கோவையை இரு காரணிகளின் பெருக்கமாக எழுதுக.

v) $x = 4,\ y = 3,\ z = -3$ ஆக இருக்கும் போது $4x - 3y + 5z$ என்ற கோவையின் பெறுமானத்தைக் காண்க.

(2 + 3 + 2 + 3 + 2 = 12 புள்ளிகள்)

05. a) i) சுருக்குக.

$\frac{6}{7} \times \frac{14}{15}$

ii) $1\frac{4}{5} \div \frac{3}{5}$ இன் பெறுமதி யாது?

iii) மோட்டார் வாகனம் ஒன்று 1 லீற்றர் பெற்றோலில் $22\frac{1}{2}$ km தூரம் செல்லும். இவ் வாகனம் $\frac{2}{5}$ லீற்றர் பெற்றோலில் செல்லும் தூரத்தைக் காண்க.

iv) குமார் $10\frac{1}{2}$ m நீளமான கம்பி ஒன்றில் இருந்து $1\frac{1}{2}$ m நீளமான சமமான கம்பித் துண்டுகள் வெட்டுவதற்கு எண்ணினார். அவ்வாறு அவர் வெட்டக் கூடிய கம்பித் துண்டுகளின் எண்ணிக்கையைக் காண்க.

b) 1m நீளமான வயரின் விலை ரூபா 25.50 ஆகும். அதே வகையிலான 9.5m நீளமான வயரின் விலை யாது?.


(2 + 2 + 3 + 3 + 2 = 12 புள்ளிகள்)

06. a) உருவில் காணி ஒன்று அளவீடுகளுடன் காட்டப்பட்டுள்ளது.

i) தரப்பட்ட காணியின் சுற்றளவு யாது?

ii) இக் காணியைச் சுற்றி குமார் என்பவர் 3 தடவைகள் நடந்தார். அவர் நடந்த மொத்த தூரத்தைக் காண்க.

iii) இக் காணியைச் சுற்றி 3m இடை வெளியில் தூண்கள் நடப்பட்டது எனின், தேவையான தூண்களின் எண்ணிக்கையைக் காண்க.







kalvi.lk

b) i) உருவின் தகவலுக்கேற்ப முக்கோணியின் பரப்பளவைக் காண்க.

ii) நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவைக் காண்க.




c)




உருவில் தரப்பட்டுள்ள தகவலுக்கேற்ப கனவுரு வடிவிலான மரக்குற்றியின் மொத்த மேற்பரப்பளவு $324cm^2$ எனின், மரக்குற்றியின் உயரத்தைக் காண்க.

( 1 + 2 + 2 + 2 + 2 + 3 = 12 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
ZOOM APP மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**